# ஜாமக்காரன்

# JAMAKKARAN

ஜா ம க் கா ர ன்

J A M A K K A R A N

(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1கொரி. 2:15


VOLUME - 6 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 11

NOVEMBER 2022 TAMIL & MALAYALAM

ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=



Mob.: No. **9894261333**

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com


கர்த்தருக்குள் அன்பான வாசகர்களுக்கு,

உங்கள் யாவருக்கும் என் வாழ்த்துதலை கூறுகிறேன்.



கர்த்தர் கடந்த மாதங்களில் நடந்த எல்லா கூட்டங்களையும் மிகவும் கிருபையாக ஆசீர்வதித்ததற்கு தேவனை துதிக்கிறேன்.

கடந்த ஜனவரி மாதம் **செம்டம்பர், அக்டோபர்** மாத ஜாமக்காரன் எல்லாருக்கும் கிடைத்ததை அறிந்து சந்தோஷம். இம்முறை **நவம்பர் – டிசம்பர் – ஜனவரி – பிப்ரவரி** மாத ஜாமக்காரனை மார்ச் மாதம் தபாலில் சேர்ப்பிப்பேன் என்று நம்புகிறேன். எப்படியோ பத்திரிகையை நிறுத்தாமல் அச்சடித்து வெளியிட கர்த்தர் அருள் புரிவதற்காக தேவனை துதிக்கிறேன். உங்கள் எல்லாருடைய ஜெபத்துக்காகவும், உதவிக்காகவும் உங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

கடந்த 2022 செப்டம்பர் மாதத்திலிருந்து பல மாநிலத்தில் உள்ள சபை **கன்வென்ஷன்களில்** கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்துகொள்ள கர்த்தர் அருள் செய்தார்.

**பெங்களூர்,** கோட்டயம், **மஹாராஷ்ட்ரா** (பாண்டூப்) **வயநாடு நிலம்பூர் ஆதிவாசிகள்** ஊழியம் **சென்னை – பெங்களூர் (ஜெய்நகர்) இளந்தோப்பு** (மதுரை) **தூத்துக்குடி** (பிச்சிவிளை) கன்னியாகுமரி மாவட்டம், **குலசேகரம் திருநெல்வேலி** NGO “B” காலனி

**NOVEMBER - 2022**

ஆகிய சபை இடங்களில் உள்ள **CSI, மெதடிஸ்ட்** சபை கூட்டங்களில் பிரசங்கித்ததற்காகவும் தேவனை துதிக்கிறேன். **கர்த்தர் மறுபடியுமாய்** என்னை **பழையது போல ஊழியத்தில் உபயோகிக்க** சித்தங்கொண்டாரே என்பதற்காகவும் ஒவ்வொரு இடத்தில் நடந்த **அற்புதங்களுக்காகவும்,** மனம் திரும்புதலுக்காவும் தேவனை **கோடானுகோடி ஸ்தோத்திரம்** ஏறெடுகின்கிறேன். மேலும் இத்தனை தூரம் நான் கடந்துசென்ற பிரயாணங்களிலும் இந்த 83 வயதின் இயற்கையாக வரும் பலவீனமோ எனக்கு ஏற்படாமல் மேலும் தங்கும் புதிய இடங்களில் எனக்கு **வியாதியோ,** வயிற்று கோளாரோ, **பெலவீனங்களோ** ஒன்றும் எனக்கு நேராமல் என்னை கிருபையாக காத்துக்கொண்ட என் மீட்பரும் என் **அப்பாவுமான** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு துதியும் கணமும் ஏறெடுக்கிறேன்.

☐ மேலும் கீழ்காணும் மாவட்டங்களில் உள்ள ஊர்களில் நடக்க இருக்கிற கூட்டங்களுக்காகவும் தேவனை துதிக்கிறேன். நீங்களும் ஜெபத்தில் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1) **மேட்டுப்பாளையம்** CSI
2) **சிவகாசி** ரேக்ளாண்ட் CSI
3) **கோயமுத்தூர்** கிரிஸ்ட் சர்ச்
4) தூத்துக்குடி **டூவிபுரம்** CSI
5) **தூத்துக்குடி** மாவட்டம் **நாயினூர்** உபவாச கூட்டங்கள்
6) CMS சுத்தாங்க சபை சாயர்புரம்
7) **மதுரை** காளவாசல் CSI
8) கோயமுத்தூர் **அம்மன்குளம்** CSI
9) பெங்களூர்

இன்னும் தேதிகள் உருதிப்படுத்தாத 3 மாவட்ட ஊர்களில் நடக்கும் கூட்டங்களையும், வட இந்திய கூட்டங்களையும் உங்கள் ஜெபங்களில் நினைத்து கொள்ளுங்கள்.

☐இந்த மாத **ஆவிக்குரிய தியானத்துக்கு** ஒரு உலக பிரகாரமான ஒரு பத்திரிகையின் ஆசிரியர் மன வேதனையோடு எழுதிய **செய்திகளை** (Editorial) அப்படியே கீழே வெளியிடுகிறேன். வாசித்து பாருங்கள் இன்றைய **பள்ளி கல்லூரி** பெண்–ஆண் **பிள்ளைகளின் நிலை** மிக வேதனையாக இருக்கிறது.

## உங்கள் பிள்ளையிடம் மனம்விட்டுப் பேசியது எப்போது ?

சில நாட்களுக்கு முன்பு **தினசரிகளில்** வந்த அந்தச்செய்தி **நெஞ்சை பதற வைத்துவிட்டது**. **பெங்களூருவில்** பள்ளி மாணவர்களின் **பைகளை** சோதித்தபோது கிடைத்த **பொருட்கள்.** பெற்ற **வயிறுகளை பற்றியெரியச் செய்ததாம்**. வகுப்பு மாணவர்களின் பைகளில் **சிகரெட்** பாக்கெட்டுகள், **போதை** பாக்குகள், **கட்டுக்கட்டாகப் பணமும்** இருந்திருக்கின்றன, **பல மாணவிகளின்** பைகளின் **கருத்தடுப்பு காண்டம் கருவியும்** கருத்தடை **மாத்திரைகளும்** இருந்துள்ளன. **குடிநீர் பாட்டில்களில்** மது இருந்திருக்கிறது. இது ஏதோ **கர்நாடகத்தில்தானே** என்று புறம்தள்ளிவிட முடியாது. **தமிழகத்தில்** ஏற்கனவே ஏராளமான மாணவர்களின் செயல்பாடுகள் **எல்லைமீறிப்** போகின்றன. **மாணவிகள்** மது அருந்துவது **சாதாரண காட்சிகளாகிவிட்டன**. மாணவர்களின் **நோட்டுப் புத்தகங்களின்** உள்ளே **அருவாள்கள்** பதுங்கியிருக்கின்றன.

தமிழகத்திலும் பல இடங்களில் இதுபோன்ற **திடீர் சோதனைகளை நடத்தினால்**, பல்வேறு **விபரீதங்களைத் தடுக்கலாம்.** ஆனால் சோதனை மட்டுமே தீர்வு அல்ல.

மாணவர்களின் இந்த போக்குக்கு அவர்களது **பெற்றோரும் ஆசிரியர்களும்தான் பொறுபேற்க வேண்டும்.** நம் பிள்ளைகள் **என்ன செய்கிறார்கள்**.? என்றே **பெற்றோர்** பலருக்கு தெரிவதில்லை. என் பையன் **தவறு செய்யமாட்டான்.**. என் மகள் **நான் கிழித்த கோட்டைத் தாண்டமாட்டாள்** என்று பலரும் நம்புகிறார்கள், ஆனால் **நம் பிள்ளைகளின்** உலகம் முற்றிலும் **வேறாக இருக்கிறது**. அந்த உலகத்துக்கு நாம் யாரும் **செல்வதே இல்லை.**

பலர் **மணிக்கணக்கில்** அலுவலகத்திலும், **நண்பர்களிடமும்** நேரம் செலவிடுபவர்கள் தங்கள் **குழந்தையிடம் மனம் விட்டு** பேசியது எப்போது என்று யோசித்து பார்க்கவேண்டும். கல்வி **வணிகமான** பிறகு, **ஒழுக்கத்தை போதிக்கும்** கலாச்சாரம் ஆசிரியர்களிடம் அருகி விட்டது.

**நாளை உலகை** ஆளப்போவது நம் சந்ததியினர்தான். அந்த சமூகத்தின் பார்வையில் பழுது ஏற்பட்டுவிடக்கூடாது, அந்த **சமூகத்தின் மூளையில் விஷம் ஏறிவிடக்கூடாது**. இது நம் குடும்ப விவகாரம் மட்டுமல்ல. **சமூக கடமையும் கூட!**

## வீடியோ கேம்

மேலே வாசித்தது நம் நாட்டு நடப்பு செய்திகள் ஆகும். ஆனால் நம் கிறிஸ்தவ சபைகளில் குடும்பங்களில் **போதைக்கு** அடிமையானவர்கள் ஏராளம். இப்போது ஒவ்வொரு பிள்ளைகள் கையிலும் **மொபைல்,** லேப் டாப், கம்யூட்டர் மூலம் **சூதாட்ட** விளையாட்டு, **சீன தேசத்து** சிறுவர் சிறுமியர்களை கவரும் **பயங்கர குரூரமான விளையாட்டு.** பிள்ளைகளை **போதை மருந்துகளைவிட** பெரிய அடிமைத்தன ஆபத்தை உண்டாக்குகிறது.

நான் போய்வந்த இந்தியாவின் அனைத்து மாநிலங்களில் உள்ள கிறிஸ்தவ சபை பிள்ளைகளின் பெற்றோர்களின் கண்ணீருள்ள ஜெப விண்ணப்பம் எங்கள் பிள்ளைகளை காப்பற்றுங்கள்.

பிள்ளைகளுக்கு **மொபைல்** வாங்கி கொடுத்த நாளிலிருந்து அவர்கள் வீட்டு அறையைவிட்டு வெளியே வருதில்லை. **குளிப்பதில்லை**, தலை வாருவதில்லை, பல பிள்ளைகள் **சாப்பாடு கூட** சாப்பிடுவதில்லை, **வீடியோ விளையாட்டுலேயே** (Game) லயித்துவிடுகிறார்கள்! வீடியோ கேம் Game விளையாடும்போது குறுக்கே **யார் போகிறார்கள்.** அருகே **யார் நிற்கிறார்கள்** என்றே அவர்களுக்கு தெரிவதில்லை, மேலும் அவர்கள் வீட்டில் யாருடனும் பேசுவதில்லை, சுரிய வெளிச்சத்தை அவர்கள் காண விரும்புவதில்லை, யாரையும் பார்ப்பதில்லை, யாரிடமும் சிறிப்பதில்லை, பயித்தியகாரர்களைப் போல காணப்படுகிறார்கள்.

கடந்த ஜனவரி மாதம் +1 படிக்கும் மாணவன், அவன் ஒரு பணக்காரவீட்டு பிள்ளை. அவன் 3 நாட்களாக வீட்டுக்கு வரவில்லை, போலீஸில் புகார் கொடுத்தார்கள், பள்ளிக்கு போகும் வழியில் ஒரு கால்வாய் அருகில் புதரில் அமர்ந்து **மொபைலில் வீடியோ கேம்** ஆடி கொண்டிருப்பதை கண்ட சிலர் அவனை விசாரித்தபோது அவன் கோபத்தோடு அவரவர் வேலையை பார்த்துக்கொண்டு போங்கள் என்று கூற ஒரு படித்த பெரியவர் அவன் அருகே பள்ளிகூட புத்தங்கள் அடங்கிய பையை வலுக்கட்டாயமாக பிடுங்கி புத்தகங்களில் உள்ள அவன் பெயரையும், படிக்கும் பள்ளிக்கூடத்தின் பெயரையும் வாசித்து

அவன் ஆசிரியரிடம் விசாரிக்க பையன் 3 நாட்களாக பள்ளிக்கும் வரவில்லை என்றார்கள். அவன் பெற்றோரிடம் தொலைபேசியில் ஆசிரியர் பேசி, விபரம் கூறி வரவழைத்து விபரம் அறிவித்த நபருடன் அனுப்பி அவனை கண்டுபிடித்து வீட்டுக்கு அழைத்து சென்றனர். அவனுக்கு பெற்றோர் வாங்கி கொடுத்த விலை உயர்ந்த சைக்கில் புதருக்கு பக்கம் படுக்க வைத்ததை பார்த்துதான் பெரியவர் சந்தேகப்பட்டு கிட்டேபோய் பார்த்து பையனை கண்டுபிடித்தார். பெற்றோர், போலீஸ் வந்தபின்தான் அவன் புதரிலிருந்து வெளியே வந்தான். அவன் முதலில் கேட்ட கேள்வி இன்று என்ன கிழமை? என்பதுதான். ஊன், உறக்கம் இல்லாமல் அந்த பையன் அந்த விளையாட்டில் திளைத்துபோனான்.

The Hindu தினசரி செய்தித்தாளில் சிறிய கட்டத்தில் மேலே குறிப்பிட்ட செய்தி வெளியிட்டிருந்தார்கள். ஆனால் இன்றைய நிலையில் இப்படிப்பட்ட செய்திகளை முதல் பக்கத்தில் பெரிய அளவில் வெளியிட்டிருக்க வேண்டும்.

காரணம் ஒவ்வொரு வீட்டிலும் இப்படிப்பட்ட வீடியோ Gameல் அடிமையான பெண் பிள்ளைகள், பையன்கள் ஏராளம். இப்படிப்பட்டவர்களை கப்பாற்ற அரசாங்கமோ, போலீஸோ ஒன்றும் செய்யமுடியாது, ஒவ்வொரு பெற்றோரும் சிந்திக்க வேண்டிய விஷயம் இது. இந்த பையனின் பெற்றோர் மிகவும் உயர்ந்த பதவியில் படித்தவர்களாக இருக்கிறார்கள். பிள்ளைகளிடம் பேச நேரம் இல்லை. கைசெலவுக்கு தங்களை தொல்லைபடுத்தாமல் இருக்க **கிரிடிட் கார்ட்** கொடுத்து விடுகிறார்கள். பிள்ளைகள் பெரும்பாலும் வீட்டு வேலைகாரிகளால் வளர்க்கப்படுகிறார்களே. பெற்றோர் என்றைக்காவது பையனை, மகளை விசாரித்தால் பதில் ஏதும் பேசுவதில்லை. அதனால் பெற்றோர்களும் சலித்து போய் அப்படியே பிள்ளைகளை விட்டுவிடுகிறார்கள்.

பெற்றோர்கள் பிள்ளைகளிடம் மிகவும் கோபத்தோடு பேசினால், நீங்கள் யோக்கியமா? **அம்மாவும் நீங்களும்** ஒருவருக்கொருவர் தினசரி சண்டை போடுவதை நிறுத்துங்கள். **தூங்கி எழுந்தால்** உங்கள் இருவரின் சத்தம் எங்கள் சமாதானத்தை கெடுக்கிறது. எங்களால் **படிப்பில் கவனம்** செலுத்த முடியவில்லை என்கிறார்கள், பணக்கார வீடுகளிலும், நடுத்தர குடும்பங்களிலும் **இக்காட்சியை** சர்வ சாதாரணமாக காணலாம். இந்த பிள்ளைகளுக்கு எந்த உறவினர்களும் தங்கள் வீடுகளுக்கு வருவது பிடிப்பதில்லை, வந்தாலும் அவர்களோடு உறவாடுவதில்லை.

பள்ளியிலிருந்தும் கல்லூரியிலிருந்தும் பிள்ளைகளின் படிப்பை பற்றியும், பெற்றோர் விசாரிப்பதில்லை, பரீட்சையில் தோல்வி, அவர்களுக்கு **பள்ளிக்கு** போக இஷ்டம் இல்லை, **கல்லூரி** செல்ல இஷ்டம் இல்லை என்று வெளிப்படையாக பிள்ளைகள் பெற்றோரிடம் கூறும்போதுதான் பெற்றோர் விழித்துக்கொள்கிறார்கள். இப்போதும் பெற்றோரின் கவுரவ பிரச்சனைதான் பிள்ளைகளைப்பற்றி யோசிக்க வைக்கிறது. சொந்தத்தில் தங்களை சுற்றி உள்ளவர்களிடத்தில் தங்கள் பிள்ளைகளைப்பற்றி பேச வெட்கப்படுகிறார்கள். இப்போது பிள்ளைகளின் முரட்டாட்டம் முற்றிய நிலையில் தலைசிறந்த மனோதத்துவ டாக்டர்களை தேடுகிறார்கள்! ஏன் இந்த வேதனை? அப்படி பெற்றோர் டாக்டர்களை கண்டு பிடித்தாலும் **பையன் வைத்தியம் செய்ய ஒத்துழைப்பு தருவதில்லை.** தற்கொலை செய்து கொள்வேன் என்று **பிளாக்மெயில்** செய்கிறான். **இரவு தூக்கம்** இல்லை, **பகலும் தூக்கம்** இல்லை, **முடிவு** பிள்ளைகள் அனாதைகள்போல் தெருவில் திரியும் **பயித்தியக்காரர்களில் ஒருவராக** மாறிவிட அதிக வாய்ப்பு உண்டு.

பெற்றோருக்கு இப்போது நிம்மதி போய், கண்ணீர்! கண்ணீர்! பெற்றோர் மன நிலையும் பிள்ளைகளால் பாதிக்கப்பட்டு பெற்றோர் ஒவ்வொரு இரவும் **தூக்க மாத்திரையில்** தான் தூங்கி விழிக்கிறார்கள்.

டெல்லியிலிருந்து – கன்னியாகுமரி வரை **வீடியோ கேமுக்கு** அடிமையான பிள்ளைகள் எண்ணிக்கை அதிகமாகிபோனதால், அனைத்து மாநில மனநோய் ஆஸ்பத்திரிகளிலும் Video Game Addicte சிகச்சைக்கென்று **தனி அறைகள்** ஒதுக்கப்பட்டுள்ளன. பெங்களூரில் ஆசியவிலேயே சிறந்த மனநோய் ஆஸ்பத்திரியில் இதற்கான சிகிச்சை ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் ஒரு வேதனை என்னவென்றால் இந்த பிள்ளைகளுக்கு சிகிச்சை செய்ய வேண்டுமானால், வீடியோ கேம்மில் **அட்வான்ஸ் ஸ்டேஜில்** உள்ள வீடியோ கேம்முக்கு அடிமையான பிள்ளைகள் **தங்கள் படிப்பை ஒரு வருடம் நிறுத்த வேண்டிவரும்.** இப்படிப்பட்ட பிள்ளைகள் மூளையிலிருந்து வீடியோ விளையாட்டு **வெறித்தன்மை நீக்க** சில நாட்கள் **ஆழ்ந்த தூக்கத்தில்** ஆழ்த்துகிறார்கள். அதோடு சிகிச்சையும் செய்கிறார்கள்.

இந்த சிகிச்சைக்குபின் விளைவு, **கோபம்,** மூர்க்கத்தனம் மாறி மிக அமைதியாக மாறிவிடுகிறார்கள். அவர்களிடம் **சிறிப்பு** போய்விடுகிறது, தமாஷ், **விளையாட்டு பேச்சு,** சொந்த குடும்பத்தாரிடம் பழகுவது **குறைந்துவிடுகிறது, நடமாடும் பிணம்போல** வீட்டில் வெருமனே அமர்ந்துள்ளார்கள். நான் நேரில் சென்று அவர்களுக்காக ஜெபிக்க சென்றபோது என் கேள்விகளுக்கும் சரியான பதில் கூறுவதில்லை. அவர்களின் **சந்தோஷம்** மறைந்து போனது, எதையும் **வாசிக்கும்** ஆசையில்லை.

இப்போது அந்த வீட்டில் **கிறிஸ்மஸ்,** ஈஸ்டர், **புதுவருடம்,** பிறந்த நாள் **கொண்டாட்டம் எதுவும் இல்லை. சாவு வீட்டைபோல் இருக்கிறது.** என்ன பரிதாபம் பாருங்கள்.

அதே வீட்டில் **மூத்த அக்காவுக்கு** கலியாணம், **பையன் கலந்துகொள்ளவில்லை,** வீட்டில் என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை. டாக்டர்கள் அவனை வலுக்கட்டாயமாக கடைவீதிகளுக்கு, விளையாட்டு இடங்களுக்கு அழைத்து, மற்றவர்களோடு பழக செய்யுங்கள் என்று ஆலோசனை கூறுகிறார்கள், ஆனால் பையன்கள் ஒத்துழைப்பதில்லை. சுமார் 6 மாதத்தில் நார்மலாக மாறுவார், படிப்பு ஞாபகசக்தியில் பாதிப்பு ஏற்படாது, +1, +2 தொடரலாம், மார்க் அதிகம் எதிர்பார்க்க வேண்டாம். ஒரு டிகிரி படித்தால் போதும் என்ற அளவுக்கு மட்டும் ஆசைப்படுங்கள் என்று மனநோய் டாக்டர்கள் ஆலோசனை கொடுத்தாலும் ஒரு சிலரை தவிர மற்ற யாரும் ஒத்துழைப்பது இல்லை.

இத்தனையும் ஏராளமான கிறிஸ்தவ குடும்பங்களில் காணப்படும் சம்பவங்களாகும்.

ஒரு குடும்பத்தில் **வீடியோகேம்** ஆடிய பிள்ளைகளிடமிருந்து **மொபைலை** அல்லது **கம்ப்யூட்டரை** பிடுங்கியதால் அந்த மகன் கோபங்கொண்டு தன் **அப்பா, அம்மாவையும்** பயங்கரமாக அடித்து காயப்படுத்திவிட்டான். ஜாக்கிறதை! மற்றொரு வீட்டில் வீடியோ Game விளையாட்டில் **கம்ப்யூட்டர் நெட்டை** பிடுங்கியதால் உடனே அவன் கோபப்பட்டு தன் தகப்பனாரை **கத்தியினால்** குத்திவிட்டான். நிலைமையை பார்த்தீர்களா? தாங்கள் என்ன செய்கிறோம் என்றே அவர்களுக்கு தெரியாது போனது.

பெற்றோர்களே ! இப்படி கம்ப்யூட்டர் அல்லது மொபைல்லில் வீடியோ கேம் விளையாடி அடிமைகளாகிபோன பிள்ளைகள் உங்களுக்கு இருந்தாலோ உங்கள் உறவினர்கள், நண்பர்கள் வீட்டில் இருந்தாலோ முதலில் அவர்களை **மனநோய் டாக்டரிடம்** காட்டுங்கள். அதற்கு **வைத்தியம் உண்டு, சிகிச்சை உண்டு, அவர்கள்** வைத்தியம் செய்ய **டாக்டரிடம் வரமாட்டார்கள்.** அப்படிப் பட்டவர்களை ஆஸ்பத்திரிக்கு அழைத்து செல்ல சில வழிகளை டாக்டர்களே சொல்லித்தருவார்கள்.

பிரச்சனைகள் ஆரம்ப கட்டத்தில் இருந்தால் **மாத்திரையிலேயே** சுகப்படுத்திவிடலாம். முற்றிய நிலையில் (வைலண்ட்) முரட்டுதனமான, பிடிவாதமான நடவடிக்கை உள்ள மகளாகவோ, மகனாகவோ இருந்தால் அப்படிப்பட்டவர்களை **மெடிக்கல் கல்லூரி** (CMC அல்லது பெங்களூர்) தொடர்புடைய **மனநோய் பிரிவு** டாக்டருடன் முதலில் **பெற்றொர் நேரில் சென்று** விவரங்களை அறிவித்தால் **அப்படிப்பட்ட பிள்ளைகளை** எப்படி அவர்களை வார்டில் கொண்டுவந்து சேர்த்து வைத்தியம் செய்வது என்பதற்கான வழிமுறைகள் அவர்கள் சொல்லித்தருவார்கள், **அதற்கு பயிற்சி பெற்ற உதவியாளர்களை** உங்களுடன் அனுப்பிவைப்பார்கள். சோர்ந்துபோக வேண்டாம், **பயப்பட வேண்டாம்,** ஜெபத்தோடு செயல்படுங்கள் **பெற்றோர்கள்** முதலில் கர்த்தரிடம் நீங்கள் வளர்த்ததின் விதம் சரியில்லை என்றும் பெற்றோராகிய உங்கள் **இருவரின் சாட்சி** பிள்ளைகள் முன் நஷ்டப்படுத்தினதை அப்படியே **ஒத்துக்கொண்டு கர்த்தரிடம் மன்னிப்பு கேளுங்கள்**. நிச்சயம் மன்னித்து வீட்டில் பிள்ளைகளால் இழந்த சந்தோஷத்தை **திரும்ப தருவார்,** முதிர்ந்த நிலையில உள்ள அடிக்ஷனான பிள்ளையின் **ஒரு வருட படிப்பு** இழக்க நேரிடும். அப்படி சுகமானால் வேறு **பள்ளிக்கோ,** வேறு **கல்லூரிக்கோ** பிள்ளைகளை சேர்க்க வேண்டிவரும்.

எந்த பிரச்சனையும் ஆரம்ப நிலையிலேயே கவனித்து உங்களை முதலில் சரிப்படுத்தி ஆரம்ப கட்டமாக இருந்தால் பிள்ளைகளுக்கு **மொபைல்** வாங்கிக்கொடுக்கும் போதே மொபைலை எவ்வளவு **நேரம் பார்க்கலாம்.** இரவிலே **படுக்கைக்கு** அல்லது **குளியல்** அறைக்கு எடுத்துக்கொண்டு போக கூடாது என்று கட்டுபாடு விதித்திருந்தால் இப்படிப்பட்ட மொபைல் பிரச்சனைகள் குறைய வாய்ப்புண்டு. இப்படி அடிமையில் அகப்பட்ட பிள்ளைகளுக்காக விசேஷ ஜெபம் ஏறெடுக்கிறேன். நீங்களும் உபவாசித்து ஜெபியுங்கள்.

**- டாக்டர் புஷ்பராஜ்**

# ONLINE BANKING (NEFT)

## Name : M G E PUSHPARAJ

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**



# பிறந்த நாள் பாக்கியம்

- BYM **R. STANLY**



பிறந்த நாட்களை ஒன்று அளவுக்கு மீறிக் கொண்டாடுவோம்: இல்லையேல் அதைக் கவனிக்கவேமாட்டோம். கொண்டாடங்கள் வணிகமயமாகும்போது கொண்டாட்டங்கள் அத்துமீறுகின்றன. இதற்கு எதிர்செயலாக, இறுகிய மனதுள்ளோர் நியாயமான கொண்டாட்ட அனுபோகங்களைக்கூட புறந்தள்ளுகின்றனர். 12 மாதங்களில் நான் மகிழ்வுடன் எதிர்நோக்குவது பிப்ரவரிதான். காரணம் தெரியாதா என்ன ? நான் பிப்ரவரி 13 அன்றுதான் பிறந்தேன். என் மனைவி லில்லியன் 22 அன்று பிறந்தார்கள் ! **உலகில் உடல் ரீதியான** என் பிறப்பு நாளைவிட (BirthDay) **ஆன்மீக ரீதியான மறுபிறப்பு நாளே** (Rebirth Day) அதிக முக்கியம் என்ற கருத்துடையவன் நான். எனினும், **பிறப்பு** இல்லாது மறுபிறப்பு எங்கே ? பிறப்பு என்பது நம்மை இறைவனது அழகிய இவ்வுலகிற்குள் கொண்டுவருகிறது. மறுபிறப்பு என்பது நம்மை அருமையான **இறையரசில் இணைத்துவிடுகிறது**. ஆதாம், ஏவாள், மெல்கிசேதேக்கு ஆகிய மூவர் தவிர இந்த உலகில் எல்லோருக்கும் **பிறந்த நாள் உண்டு.** (எபி. 7:3) பிப்ரவரி மாதம் பிறந்த பிரபலங்கள் யாரென்று பார்க்க ஏதோவோர் ஆசையில் கம்ப்யூட்டரில் **கூகிளை** (Google) உருட்டினேன்.

கிராமபோன், மின்சார விளக்கு, ஒளிப்படக் கருவி போன்றவற்றைக் கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிசன் ( 11 பெப்ருவரி 1846 ), இயற்பியல் துறையில் அரியவற்றை கண்டுபிடித்த கலிலியோ (15 பிப்ரவரி 1564), அமெரிக்க வரலாற்றில் உயர்ந்து நிற்கும் முதலாவது அதிபர் ஜார்ஜ் வாஷிங்டன் (22 பிப்ரவரி 1732) நீங்கள் பிறந்த மாதத்தின் சிறப்பை (?) அறிய கம்யூட்டரில் கூகிளுக்குச் சென்று பாருங்கள் !

பிறந்த நாட்களின் முக்கியத்துவத்தையும், அவற்றை எவ்விதம் நினைவு கூறலாம் என்றும் சுருக்கமாக பைபிளிலிருந்து தெரிந்துக்கொள்வதே இக்கட்டுரையின் நோக்கம். இத்தலைப்பினைத் தழுவிய திருமறைப் பகுதிகளைக் கடந்த பத்து நாட்கள் தியானித்தேன். அது அற்புதமான பயிற்சியாயிருந்தது. இது உபதேசத்துக்குக்கடுத்த கட்டுரை அல்ல. இதனை முழுமையாகவோ ஏற்பதோ, எதிர்ப்பதோ, உங்கள் விருப்பம். *பிறந்த நாள் பாக்கியத்தை* எவ்வளவாய் நாம் அனுபவித்து, திருநாமத்தை புகழலாம் என்று திருமறையிலிருந்து எனக்குப்

புரிந்தவற்றையே இங்கு எழுதியுள்ளேன். **பிறந்த நாள் கொண்டாட்டங்கள் வேண்டவே வேண்டாம்** என்ற மனப்பான்மை உங்களுக்கிருந்தாலும், இச்செய்தியை வாசித்துப் பாருங்கள் ஏதோவொரு வகையில் பயனடைவீர்கள். பைபிளில் வசனங்களை எடுத்துப்பார்க்கத் தவறாதீர்கள்.

## தேவனது திட்டம்

இவ்வுலகிற்குள் நம்மைக் கொண்டுவந்ததற்காய்த் **தேவனைத் துதிப்பதற்குப் பிறந்த நாட்கள்** ஒரு சிறந்த வாய்ப்பு. அதன் அடிப்பயில் நாம் எல்லாருமே தேவனது சந்ததியார் என்பதையும் அவருக்குள்ளேயே நாம் இருக்கிறோம் என்பதையும் மறந்துவிடக்கூடாது. (அப்.17:27,28) **நமது பிறப்பு என்பது தற்செயலாக நிகழ்ந்ததல்ல**, அது தேவனது நியமனம் பெற்றெடுத்த **கன்மலையானவரும், தந்தையானவருமான** சர்வ வல்லவரை மோசேயின் பாடல் கொண்டாடுகிறது. (உபா. 32:18) **அவரை நினையாது இருக்கக்கூடாது.** அவரை மறந்துவிடக்கூடாது என்று நாம் அறிவுத்தப்பட்டுள்ளோம். தற்செயலாய் அல்ல, **தேவனது அநாதி தீர்மானத்தின்படியே நாம் இவ்வுலகில் இருக்கிறோம் என்ற அறிக்கையினை ஒவ்வொரு பிறந்த நாளன்றும் நாம்** புதுப்பித்துக்கொள்ளவேண்டும்.

## கருவறையிலிருந்து

நாம் **பிறப்பதற்கு முன்னரே,** ஏன் நாம் தாயின் **கருவறையில் உருவாகும் முன்னரே** தேவன் நம்மை அறிந்திருக்கிறார். தீர்க்கன் எரேமியாவைத் தேவன் அழைத்தபோது அவரிடம் கூறிய முதல் வார்த்தைகள் என்னவென்று கவனியுங்கள். **தாயின் வயிற்றில் நான் உன்னை உருவாக்குவதற்கு முன்னரே** உன்னை அறிந்தேன்: கருவறையிலிருந்து நீ வெளி வரும் முன்னரே நான் உன்னைப் பிரித்தெடுத்தேன். (எரே. 1:4,5) சிம்சோனின் காரியமும் இப்படித்தான். அவரது **தாயின் கருவறையிலிருந்து வெளிவரும் வேளை தொடங்கி** அவர் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பார் என்று கர்த்தருயை தூதனானவர் சிம்சோனின் தாயாரிடம் கூறினார். (நியா. 13:5,7). இதோ **அப்போஸ்தலன் பவுல்** கூறுவதைக் கேளுங்கள். **நான் எனது தாயின் வயிற்றில்** இருந்தது முதல் என்னைப் பிரித்தெடுத்து தமது கிருபையினால் தேவன் என்னை அழைத்தார். (கலா, 1:15) தலைமுறை தலைமுறையாய் அடுத்தடுத்துப் பிறக்கவிருக்கும் சந்ததியாரும் பூவுலகில் தமக்குச் சாட்சிகளாயிருக்கவேண்டும் என்பதே இதய வாஞ்சை (சங். 78:6)

## நல்ல தோற்றம்

வாழ்வின் ஆசிகளில் எதையும் நாம் சாதாரணமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. நல்லது என்ற எந்த ஈவும், நிறைவானது என்ற எந்த வரமும் விண்ணகத்திலிருந்து ஜோதிகளின் பிதாவிடமிருந்து இறங்கி வருகிறது. (யாக் 1:17) நாம் பிறக்கும் போது நம் குறைபாடுமின்றி நாம் **பிறந்ததற்காய்ப்** பணிவுடன் **பராபரனைப் போற்ற வேண்டும்.** தனது இருதயத்தைக் தேவனுக்கு நேராக உயர்த்தித் திருப்பாடகன் தாவீது எவ்விதம் அவரைத் துதிக்கிறார் பாருங்கள்: ஆண்டவரே, எனது **உள்ளுறுப்புகளை உண்டாக்கியவர் நீர், என்னைப் படைத்ததால் உமக்கு**

**நன்றி** நவில்கிறேன். உமது செயல்கள் அதிசயமானவை ! (சங் 139:13,14) இப்படி துதித்துவிட்டு அவர் தொடர்ந்து சொல்வது. இது எனது மனதிற்கு நன்றாய் தெரியும்! **முடமாயிருந்த மேவிபோசேத்தை** ஒவ்வொரு நாளும் **தனது சாப்பாட்டு மேசைக்குத் தூக்கிக் கொண்டு வரப்பட்ட வேளைகளிலெல்லாம்** தாவீது **இதனை நன்றியுணர்வுடன் நினைத்திருப்பார்**. (2சாமு 9:10-13) பக்தன் யோபுவின் புரிதலும் இதுவே. என்னை வனைந்து வடிவமைத்து உண்டாக்கியது உமது கைகளே... வாழ்வையும் இரக்கத்தையும் எனக்கு வழங்கினீர். எனது உயிர் மூச்சை உமது கரிசனையே காத்தது. (யோபு 10:8, அ. 12) இந்த அறிவுதான் அவரைக் குருடருக்குக் கண்களும் முடவருக்கு கால்களும் ஆக்கின (29:15) மனித உடலின் அதிசயக் கூறுகளைக் விளக்க முடியாது. **நமது கண்களுக்குக் நிகரான கேமரா** நவீன உலகில் உண்டோ? **நமது மூளையுடன் போட்டியிடக்கூடிய கணிணி** உண்டோ? நமது **இருதயம் போன்று இடைவிடாது எவ்வித பராமரிப்பும் இன்றி** தளராது **இயங்கக்கூடிய பம்ப்** எதுவுமுண்டோ? **கருவறையியல் எப்படித்தான் எலும்புகள் உருவாகின்றன** என்பது ஞானி சாலொமோனுக்கே வியப்புதான். (பிர.11:5)

## அங்கவீனக் குழந்தைகள்

**உறுப்புகளில் எவ்விதக் கேடுபாடுமின்றி நான் பிறந்ததற்காய்த் தேவனை** இடையறாது துதிக்க வேண்டுமென்ற உணர்வு வேலூர் CMC மருத்துவமனையில் 1971 முதல் 1975 வரை ஒரு கட்டிடப் பொறியியலராய்ப் பணியாற்றிய காலத்தில்தான் எனக்குப் உதித்தது. **குறைபாடுகளுடன் பிறந்த தங்கள் சிசுக்களைப் சுமந்துகொண்டு** பிரசவப்பிரிவிலிருந்து **தாய்மார் கண்ணீர்** வடித்தவண்ணம் **வெளியே சென்றதைப் பார்த்த எனது இருதயம் நொறுங்கியது.** பார்வையற்ற **கண்கள், பிளந்த உதடுகள்,** சூம்பிய **கைகள்,** திருகிய **பாதங்கள்,** ஐயோ, **சொல்லவே விருப்பமில்லை !** பெற்றோரது பக்தியினால்தான் குறைபாடற்ற குழந்தைகள், அல்லது **தந்தை தாயின் அவபக்தியனால்தான்** குறைபாடுள்ள குழந்தைகள், **என்றெல்லாம் சொல்லிவிட முடியாது.** முட்டாள்தனமான இவ்வெண்ணம் நம்மில் பலருக்கு இருக்கத்தான் செய்கிறது. இதனை நமதாண்டவர் என்றோ திருத்திவிட்டார் (யோ. 9:1-3) பிறவிச் சப்பாணி ஒருவன்மீதுதான் ஆதிச்சபையின் முதல் அற்புதம் நிகழ்த்தப்பட்டது. (அப். 3:1-10) இன்னொரு சப்பாணிக்குக் கிடைத்த அற்புதம் சுகம் நகரையே அசைத்துவிட்டது. (14:1-10)

## பரம்பரைச் சாபம்

**பரம்பரை பாவம்** எனும் உபதேசத்திற்குத் திருவிவிலியத்தில் இடமேயில்லை. **அடுத்தத் தலைமுறையினர் தேவனைப் பகைக்கிறவர்கள். என்றிருந்தால்தான்** அவர்கள் தண்டிக்கப்படுவர் (யாத் 20:5) **தந்தைக்காய்த் தனயன்** தண்டிக்கப்படுதில்லை. **ஒவ்வொரு தனி நபரும் தனது பாவங்களுக்கு மட்டுமே பொறுப்பு.** (உபா. 24:16, 2 இரா. 14:6, 2 நாளா 25:4) **மாங்காய்** அல்லது **புளியங்காய் சாப்பிட்டால்** எனது பற்கள்தான் கூசும் எனது பிள்ளைகளது பற்கள் அல்ல. (எசேக் 18:1-4, 19,20) புதிய உடன்படிக்கையின் ஆசிகளைக் குறைத்து மதிப்பிடாதீர்கள். (எரே 31:29-34, எபி. 8:8-12, 10:16,17) **நெறி கெட்டலைந்த**

தாமாரும், வேசியராகவும் தாவீதின் வம்ச வரலாற்றில் இவர்கள் பாட்டி, பூட்டி வரிசையிலிருந்தனர். (மத். 1:3,5) **பரம்பரைச் சாபம்** என்று **உபதேசிக்கும்** ஊழியர் எவரிடமும் **கொஞ்சமும் நெருங்காதீர்கள்.** அவரிடம் இதுபோன்ற பலசரக்கு பொய்கள் நிறைய இருக்கும். **பெற்றோர்** பக்தியற்றோராயினும் **குழந்தைகள் பரிசுத்தமாகவே இருக்கிறார்கள்** என்பதே திருமறையின் கூற்று (1 கொரி 7:14)

**மூன்றாம்** பாலினத்தவரையோ (Transgender) **குள்ளர்களையோ** (Dwarfs) பார்க்கும்போது முகத்தைக் சுளிக்காதீர்கள். அவர்களது நிலையில் உங்களை வைத்துபார்த்து அவர்களுக்குப் பரிவு காட்டுங்கள். **தானியேல்** ஓர் **அண்ணகன்** என்பது உங்களுக்குத் தெரியுமா? (தானி 1:3,7, மத் 19:12) ஆனாலும் **காபிரியேல் தூதன்** அவரைப் பார்த்து, நீர் **மிகவும் பிரியமானவன்** என்றான் (தானி 9:23) **சகேயு** ஒரு **குள்ளன், இயேசு** அவரை **எவ்வளவாய் நேசித்து** அவரை **ஆபிரகாமின் குமாரன்** என்றழைத்தார் ! (லூக் 19:3.9) வகுப்பில் நான் (R. STANLY) முதல் மாணவன் மற்றும் **வகுப்பு தலைவன்** என்ற திமிரில் கூனனாயிருந்த உடன் மாணவன் ஒருவனை நான் அலட்சியமாய் நடத்தினேன் (1960). நான் **மறுபடி பிறந்தபோது** (1962) அவனது வீட்டிற்கு சென்று **அவனிடமும்** அவனது **பெற்றோரிடமும் மன்னிப்பு** கோரினேன். உயர் தலைமைப் பயிற்சிக்காக உலகெங்கிலுமிருந்து பலரும் செல்லும் அமெரிக்க நிறுவனமான Haggai Institute இன் நிறுவனர் Dr. John Haggai அவர்கள் **மூளை பாதிக்கப்பட்டிருந்த** தனது மகனை (1950 -1974) சக்கர நாற்காலியில் முக்கிய நிகழ்வுகளுக்கு அழைத்து வருவார். Word for the World என்ற இயக்கத்தின் நிறுவனர் அண்ணன் **அகஸ்டின் ஆசீர்** அவர்களது 40 வயது மகன் சக்கர நாற்காலியில் அமரவைத்து 1977ல் சென்னையில் நடந்த பில்லி கிரஹாம் கூட்டத்தில் பண்டிதர் **பில்லி கிரஹாம் அவர்களுக்கு** அண்ணன்தான் அவர் பிரசங்கத்தை தமிழாக்கம் செய்தார்கள். **பார்வையற்றோர்,** காது கேளாதோர், **ஊனமுற்றோர்,** மூளை வளர்ச்சி குன்றியோர் **அநாதைகள்** போன்றோரது இல்லங்களுக்கு உங்கள் **பிறந்த நாளன்று பலகாரங்கள்** மற்றும் **பொருட்கள்** எடுத்துச்சென்று **அங்குள்ளோரை மகிழ்வியுங்கள்** அந்த வேளையில் உங்களுக்கு **ஆரோக்கியமான** உடலை தந்த **தேவனைத் துதித்து திரும்புங்கள். எயிட்ஸ் நோயுடன்** பிறக்கும் குற்றமில்லாப் பாலகரையும். அன்னை தெரசாவின் Missioneries of Charity போன்ற நிறுவனத்தாரால் **குப்பைத்தொட்டிகளிலிருந்து** மீட்கப்படும் சிசுக்களையும் நினைத்துக் கொள்ளுங்கள்.

## பிறப்பிலேயே குறைபாடுகள்

சிசு இறப்புகளை நான் பார்த்திருக்கிறேன். **இறந்தே** பிறக்கும் குழந்தைகளின் அடக்க ஆராதனைகளில் பங்கேற்றிருக்கிறேன். (யோபு 3:16, சங். 58:8) அவ்வேளைகளில் **கதறியழும்** பெற்றோரைப் பார்த்து கண்ணீர் சிந்தாது இருக்க முடிவதில்லை. **குறைப் பிரசவங்கள்** அசாதரணமல்ல. அப்போஸ்தவன் பவுலே ஒரு குறைபிரசவக் குழந்தைதான் என்று தோன்றுகிறது. (1 கொரி 15:8) **இவ்விதக் குழந்தைகளை** வளர்ப்பதற்குப் பெற்றோர்

**படும்பாடு கொஞ்சமா?** நஞ்சமா? **கருச்சிதைவுகளால்** கண்ணீரில் மிதக்கும் பெண்மணிகளுக்காகவும் பரிதவிப்போம்! சில ஆண்டுகளுக்குமுன் வரை பிரசவங்களையெல்லாம் தாதியர் மூலம் வீட்டில்தான் பிரசவம் நடக்கும் அன்று. மருத்துவமனைக்குச் செல்வது அரிதாயிருந்தது. ஒரு தாதியாக மணமாகாது பணியாற்றிய எனது பெரியம்மா (1911 – 1989) விருதுநகரில் ஆயிரக்கணக்கான பிரசவங்கள் நடத்தியிருப்பார்கள்.

அன்றைய முதல் மந்திரி திரு. காமராஜ் அவர்களது உறவினர் பலருக்கும் பெரியம்மாதான் தாதியாயிருந்தார்கள், பெருமளவில் மருத்துவர்களைக் கொண்டிருந்த எனது மனைவியின் குடும்பத்தார் அவளது பிரசவத்தை வீட்டிலேயே வைத்துகொள்ளத் தீர்மானித்தனர். கடினமாயிருந்த அப்பிரசவத்தின்போது **எங்கள் மகள் இவாஞ்சலினின்** வலது கை பாதிக்கப்பட்டது. இன்று வரை அவளது **வலது கை குட்டையாகவும்** பலக்குறைவாகவுமே இருக்கிறது. அவளை பார்க்கும்போது எங்களது மனவேதனையை விளக்க முடியாது. எனது மனைவி Dr. லில்லியன் ஸ்டேன்லி ஒரு குழந்தை நல மருத்துவர்! திருமறையிலிருந்து கற்றது தவிர்த்து வாழ்கையில் அனுபவித்த மற்றும் கண்ட பல காரியங்கள் **எனது அங்கவீனமற்ற உடலுக்காய்** எவ்வளவாய் அதிலும் குறிப்பாய் **எனது பிறந்த நாளன்று**, தேவனைத் துதிக்கவேண்டுமென்று சொல்லித்தந்துள்ளன. நல்ல நிறமோ கருப்போ, உயரமோ குள்ளமோ மெல்லியதோ தடித்ததோ எப்படியிருந்தாலும், **தேவன் உங்களை உருவாக்கிய விதத்தில் திருப்பியாயிருங்கள்.** உங்களுக்கு எது சிறந்தது என்று தேவன் அறிவார். **பிறருடன் உங்களை ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள்.** அழகெல்லாம் தோலால் தான்!

### பிரசவ வேதனை

**நமது தாய்மாரை** நன்றியுடன் நினைக்கவும் **பிறந்த நாட்கள்** ஏற்ற வேளையாகும். பிரசவ **வேதனை** போன்று கொடுமையானது எதுவுமில்லை. விழுகையின் சாபம் என்பதின் ஒரு பகுதியான இதிலிருந்து **இன்னும் நாம் விடுவிக்கப்படவில்லை** (அதி 3:16) நியாயப் பிரமாணத்தின் சாபம் என்பதிலிருந்து மட்டுமே நாம் இப்பொழுது மீட்கப்பட்டுள்ளோம். (கலா.3:10,13, ரோ, 8:19-23) பைபிளில் பல இடங்களில் பிரசவ வேதனைபற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. (ஏசா. 13:8, 21:3, 42:14, எரே, 13:21, 22:23, ஓசி 13:13, மீகா 4:10, கலா 4:19) வரவிருக்கும் மகா பெரிய உபத்திரவத்தை (Great Tribulation) இயேசுவானவர் **(பிரசவ)** வேதனைக்கு ஒப்பிட்டார். (மத் 24:8. மாற் 13:8. யோ 16:21) இதுவே பவுலின் புரிதலாகவுமிருந்தது (1 தெச 5:2, 30). தேவனது மட்டற்ற கிருபையே **நமது தாய்மாரைப் பிரசவத்தில்** காப்பாற்றிற்று. (1 தீமோ 2:14, 15) தங்களது அன்புக் கரங்களில் நம்மை ஏந்திக்கொண்டு மார்பில் அணைத்த வண்ணம் எத்தனை இரவுகள் கண் விழித்திருப்பார்கள்! ஓரிரு பிரசவங்களத் தொடர்ந்து கருவறை சம்பந்தமான எத்தனை நிரந்தர பிரச்னைகளுடன் அவர்கள் வாழ வேண்டியிருந்தது. ஆண்கள்தான் பிள்ளை பெறவேண்டும் என்றிருந்தால், அடுத்த பிள்ளை வேண்டவே வேண்டாம் என்றிருப்பார்கள் என்றார் ஒருவர். பால் கொடுக்கும் தாயைப் பேதம்மன்றதே தமதன்பு என்றார் தேவன் (ஏசா 49:15) எனது தாயாருக்காய் அவரைத்

துதிப்பதற்காய் எனது பிறந்த நாளில், முடிந்த வேளைகளிலெல்லாம் வேலூரிலிருக்கும் அவர்களது கல்லறைக்குச் சென்று வருவேன். இவ்வித ஞாபகார்த்த உணர்வுகள் ஆன்மீகத்திற்கு எதிரானவை அல்ல (அப். 2:29)

## அம்மா அப்பா

தங்களைப்பெற்ற தாயைப் பார்த்திராத குழந்தைகள் உண்டு தெரியுமா ? (ஏசா. 37:3) **பிரசவத்தின்போது இறப்புகள் என்பது** நமது நாட்டின் பின்தங்கிய கிராமப் பகுதிகளில் இன்னும் அதிகம்தான். அப்போஸ்தலன் பவுலின் பூட்டனார் பெஞ்சமினின் தாயார் ராகேல் **பிரசவத்தின்போது இறந்தார்கள்.** (ஆதி 35:18) உங்கள் பெற்றோர், அதிலும் குறிப்பாய் உங்கள் தாயார் உயிரோடிருந்தால், உங்கள் பிறந்த நாளன்று அவர்களைக் சந்தித்து அல்லது தொலைபேசியில் அவர்களுடன் தொடர்புக்கொண்டு. **உங்களை இந்த நிலைக்கு வளர்த்துகொண்டு வந்ததற்காய்** வாயார நன்றி சொல்லுங்கள். அவர்களை **இவ்விதம் கனப்படுத்துவது உங்கள் வாழ் நாட்களை** நலமாக்கும். (எபே. 6:1-3, யாத் 20:12) **பாராட்டத்** தவறுவது சபிப்பதற்குச் சமமாகிவிடலாம். (ஏசா? 45:10) அவர்களோடு உட்கார்ந்து நீங்கள் பிறந்த விதத்தை விளக்கமாய்க் கேட்டுத்தெரிந்துக் கொள்ளுங்கள். நமது பிறப்பிற்காய் அவர்கள் எவ்வளவோ ஜெபித்திருப்பார்கள். **ரெபெக்காள்** கருத்தரிக்கவேண்டுமென்று **ஈசாக்கு கர்த்தரிடம் மன்றாடி வேண்டினார்**. (ஆதி 25:21) தனக்குப் பிள்ளை வேண்டுமென்று **அன்னாள் மனம் கசந்து, மிகவும் அழுது** கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணினார்கள் (1 சாமு 1:10,20) பிள்ளை பெறும் வயதைத் தாண்டிய பின்னரும் **சகரியாவும் எலிசபெத்தும்** குழந்தை வேண்டுமென்று ஜெபித்துக்கொண்டேயிருந்தனர். (லூக் 1:5-7, 13,36) இன்று போல் இல்லாது, அன்றைய நாட்களில் ஒவ்வொரு பிள்ளையும் **தேவன் தந்த ஈவு** என்றே பெற்றோர் கருதினர். தேவனே, ஆபிரகாமுக்கு **ஈசாக்கை** கொடுத்தார் (யோசு. 24:3) சிரிப்புக்கு ஆளாகியிருந்த அக்குடும்பத்திற்குச் சிரிப்பைக் கொண்டு வந்தான் ஈசாக்கு ( = சிரிப்பு ) (ஆதி 21:6) தேவனே ஈசாக்குக்கு **யாக்கோபையும் ஏசாவையும்** கொடுத்தார். (யேசு 24:4) யாக்கோபு தனது பிள்ளைகளை தேவன் அருளின் பிள்ளைகள் என்று ஏசாவிடம் அறிமுகம் செய்தார் (ஆதி33:5) இவர்கள் **தேவன் எனக்கு அருளின** குமாரர் என்று தனது மகன்களை யோசேப்பு **யாக்கோபிடம்** கூறினார். (45:9) பிள்ளைகள் **கர்த்தரால் வரும் சுதந்தரம்** கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்குப் பலன் (சங் 127:4) Happy Birth Day to You என்ற பிரபல வாழ்த்துப் பாடல் MildredHill (1859 -1916) மற்றும் Patty Hill (1868-1946) என்ற இரு அமெரிக்க சகோதரிகளால் **இயற்றப்பட்டது.** இவர்களிருவரும் பாலர் பள்ளி ஆசிரியைகள். இசை வல்லுனர்கள். அவர்களது இரு கருவிகளுடன் இப்பொழுது சேர்க்கப்பட்டுள்ள கவி: We are glad God made you. we are glad God made you. We are s-o-o-o glad God made you . Happy Birth day to you. நீங்கள் பிறக்கும்முன் அல்லது **பிறக்கும்போது** தேவனுக்கு உங்கள் பெற்றோர் செய்த வாக்கு(கள்) **என்னவென்று கேட்டுக் தெரிந்துக்கொள்ளுங்கள்.** இதனை வாசிக்கும் தங்காய். நீ கருவுற்றிருந்தால் **உனது கருவறையில்** வளர்ந்துக்கொண்டிருக்கும்

சிசுவை தேவன் தொட்டு ஆசீர்வதிக்கும்படி வேண்டிடு. **தனது தாயின் வயிற்றிலிருக்கும்போதே** யோவான் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார். (லூக் 1:5)

## இயேசுவின் பிறந்த நாள்

பிறந்த நாள் கொண்டாட்டங்கள் **மாம்சீகமானவை** என்று கருதும் மிஞ்சிய பரிசுத்தவான்கள் சிலருண்டு. தமது மகனின் பிறந்த நாளை தேவன் (பிதா) எவ்வளவாய்க் **கொண்டாடினார்** பாருங்கள். **பாலகனைப் பார்த்துவர** எத்தனை பேரை அனுப்பிவைத்தார் ! **மேலிருந்து தூதர்கள்** (வாயிலிருந்து மேய்ப்பர்கள் ! தொலைவிலிருந்து **ஞானிகள்!** மிகுந்த **மகிழ்ச்சி உண்டாக்கும் நற்செய்தி** என்று தேவதூதன் அப்பிறப்பினை அறிவித்தான். (லூக்2:9,10) உன்னதத்திலிருக்கும் தேவனுக்கு மகிமை என்று வானத்தின் **திரளான சேனையினர் ஆர்பரித்தனர்.** (வச. (13:14) தமது மகனை முத்தமிட்டுத் (பிதா) தந்தையானவர் சொன்னது. **நான் இன்று உம்மைப் பெற்றெடுத்தேன்!** பிதாவானவரின் **இப்பிறந்த நாள் வாழ்த்து** விவிலியத்தில் நான்கு இடங்களில் வருகிறது. (சங். 2:7, அப். 13:32, எபி. 1:5, 5:5) **பிறந்த நாள் பரிசாக மகனுக்கு** அப்பா (பிதா) வாக்களித்தது என்னவென்று பாருங்கள். நீர் **எனது மைந்தர்** இன்று நான் **உம்மைப் சொத்தாக்குவேன். பூவுலகை** அதன் கடையெல்லை வரை **உமக்கு உடைமையாக்குவேன்** (சங். 2:7,8) தமது **அப்பாவின் இந்த பிறந்த நாள் வாக்கினை** மனதிற் கொண்டிருந்ததாலே அலகையின் வார்த்தைகளை இயேசு தூக்கியெறிந்தார். (மத். 4:8-10)

## வாழ்த்துக்களும் வெகுமதிகளும்

பிறந்த நாட்கள் மற்றும் முக்கிய நாட்களைக் கொண்டாடுவது விவிலியத்திற்கு விரோதமானதல்ல. **திருமுழுக்கினன் யோவானது** பிறந்த நாளானது **உறவினருக்கும் அயலகத்தருக்கும்** பெரு மகிழ்ச்சியும் பேருவகையும் தந்தது (லூக் 1:14, 57,59) ஈசாக்கு பால் மறந்த நாளில் கூட ஆபிரகாம் **பெரிய விருந்து பண்ணினார்.** (அதி 21:8) தங்கள் பிள்ளைகள் பிறந்த நாள் முதல் அவர்களது வாழ்வில் தேவன் நிகழ்த்தியுள்ள பெரிய காரியங்களை அவர்களுக்கு ஆன்மீகச் சிந்தையுள்ள பெற்றோரை நினைவுப்படுத்தலாம். பிறந்த நாள் பரிசுகள் விரும்பாத வயதை எவரும் எட்டிவிடுவதில்லை. தனது 85ம் **பிறந்த நாளன்று** யோசுவாவிடம் காலேப் ஒரு **மலை நாட்டைக் கேட்டார்**. (யோசு 14:10-120) வம்ச வரலாற்றினை நினைவுப்படுத்திகொள்வது சரித்திரச் சங்கிலியை அறுந்துப்போகாது காக்கும். தீமோதேயுவுக்கு அவரது பாட்டயம்மாவை பவுல் நினைப்பூட்டினார். (2 தீமோ. 1:5) உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் அவர்களது பிறந்த நாளன்று மனப்பூர்வமாய் வாழ்த்த மறவாதீர்கள். SMS, WhatsApp. e-mail போன்றவை மூலம் அனுப்பப்படும் வாழ்த்து வரிகள் பிறந்த நாள் வாழ்த்து அட்டைகள் (Greeting Cards) நெருங்க முடியாது. வாழ்த்து அட்டையில் உங்கள் பெயரும் பிறந்த நாள் கொண்டாடுபவரின் பெயரும் **உங்கள் கையால் எழுதப்பட்டு** அனுப்பப்படுவது **உறவை நெருக்கமாக்கும்**. நீங்களே வாழ்த்து அட்டைகளைத் தயாரிப்பது இன்னும் மேல். கடந்த ஆண்டுகளில் நண்பர்கள் எனக்கு அனுப்பிவைத்த வாழ்த்து அட்டைகளைப்

பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். இன்றைய உலகில் உறவுகள் வறண்டு வருகின்றன. சுபாவ அன்பின்மை (ரே. 1:31,2) தீமோ. 3:3) சமுதாயத்தில் நட்புறவு (Friendship) இல்லை! சபையில் சகோதரப் பாசம் (fellowship) இல்லை! இப்போக்கிற்கு நாம் எதிர் நீச்சல் போட்டு நமது சக உறவுகளை இனிதாக்குவோம். கையால் எழுதும் கடிதங்களைவிட **நேரடிச் சந்திப்புகளையே அப்போஸ்தலர் விரும்பினர்** (21 யோ. 12:3, யோ. 12:3,14) நண்பரே, நாம் எங்கே சென்று கொண்டிருக்கிறோமோ?

## பிறந்த நாள் விருந்துகள்

வாழ்வின் அ னுபவங்களைச் **சாட்சியாச்** சொல்லப் **பிறந்த நாள் விருந்து வேளைகளைச்** சாதகமாய்ப் பயன்படுத்தலாம். உங்கள் உறவினர் தவிர அயலகத்தார். நண்பர் மற்றும் உடன் அலுவலர்களையும் அழையுங்கள். தேவன் உங்களை இதுவரை எவ்விதம் **மேடுகள்,** பள்ளங்கள், **திரட்சி,** வறட்சி, **இன்பம், துன்பம்** இப்படிப்பட்டவை வழியாக நடத்தி வந்திருக்கிறார் என்று அவர்களுக்கு **சுருக்கமாகச் சொல்லுங்கள். மறுபடியும் பிறக்கவேண்டியதின்** அவசியத்தையும் விளக்கிக் கூறுங்கள். நமது பிறப்பு நாளன்று நாம் பாவத்தின் பிறந்தோம். அதாவது முதல் மனிதன் ஆதாம் துவக்கி நமது மூதாதையர் பெற்றோரிடமிருந்து நாம் பாவ சுபாவத்தை உள்வாங்கினோம் (சங். 51:5, ரோ, 5:19) நமது **மறுபிறப்பு நாளன்று** நாம் பாவத்திலிருந்து மீட்கப்படுகிறோம். அதுவே **சரித்திரத்திலே இணையற்ற பிறந்த நாளாம்.** கிறிஸ்து ஜெயந்தியின் செய்தி (மத் 1:21) பிரசங்கம் பண்ண வேண்டாம். உங்கள் சரிதையை எளிய நடையில் பேசிப் பகிர்ந்துக்கொள்ளுங்கள். திருமறை சரித்திரத்தில் விருந்துகள் சுப காரியங்களாகவே இருந்திருக்கின்றன. (ஆதி 29,22, நியா. 14:10 எஸ்தர் 2:18) கல்யாண விருந்தொன்றில்தான் இயேசுவானவர் தமது முதலாம் அடையாள அற்புதம் செய்தார். (யே.2:1-11) முழுநேர ஊழியத்தில் நுழைவதற்காக வரித்துறை அலுவலகத்திலிருந்து தனது வேலையை ராஜினாமா செய்தபோது **மத்தேயு ஒரு விருந்து நடத்தினார். பணம் வசூலிப்பதை விட்டுத் தச்சர் ஒருவராடு** இணைந்துக்கொண்டது **ஏன் என்று** தனது உடன் அலுவலருக்கு நிச்சயம் **விளக்கியிருப்பார்.**(லூக் 5:27-29) நமதாண்டவருக்கு விருந்து என்றால் ரொம்பவே பிடிக்கும். எனவேதான் அவரை சாப்பாட்டு ராமன் என்று மக்கள் பகடி பண்ணியிருக்கலாம். (மத் 11:19) விண்ணகத்திலும் நமக்கு ஒரு விருந்து ஆயத்தம் பண்ணப்படுகிறது. அதுதான் இதுவரை எவரும் கண்டிராததாய் இருக்கும் (வெளி. 19:9, ஏசா 25:6)

## எளியவருக்கு விருந்து

உங்கள் பிறந்த நாளையொட்டி இன்னொரு விருந்தும் நடத்தலாம். ஏழை எளியோர் மற்றும் நசுக்கப்பட்டோருக்கென்றே அதனை நடத்துங்கள். தம்மை விருந்துக்கு அழைத்த ஒருவரிடம் இயேசு கூறியதைக் கவனியுங்கள். நீர் பகல் விருந்தோ, இரவு விருந்தோ கொடுக்கும்போது உம் நண்பர்களையோ, சகோதர சகோதரிகளையோ, உறவினர்களையோ, செல்வம் படைத்த அண்டை வீட்டாரையோ அழைக்கவேண்டாம். அவ்வாறு அழைத்தால் அவர்களும் உம்மைத் திரும்ப அழைக்கலாம். அப்பொழுது அதுவே உமக்கும் கைமாறு

ஆகிவிடும். **மாறாக** நீர் விருந்து அளிக்குபோது **ஏழைகள், ஊனமுற்றோர் பார்வையற்றோர்** போன்றோரை அழையும். அப்போது நீர்பேறு பெற்றவர் ஆவீர். ஏனெனில் உமக்குக் கைமாறு செய்ய அவர்களிடம் ஒன்றுமில்லை. நீதிமான்கள் உயிர்தெழும்போது உமக்கு கைமாறு கிடைக்கும். (லூக் 14:12-14) நண்பர்களுக்குப் பதிலாக நலிந்தோருக்கு விருந்து என்று அல்ல. அதைத்தவிர இன்னொன்று என்றே நான் இதனைப் புரிந்துக்கொள்ளுகிறேன். இதனை வழக்கத்திற்கு கொண்டுவருவோம்.

## பிரபல மனிதர்

ஆன்மீக உலகிலோ பொது உலகிலோ சிறந்து வாழ்ந்து பணியாற்றிய நபர்களது பிறந்த நாட்களை நினைவு கூறுவது வாழ்வுக்குப் புதிய பரிமானம் கூட்டும். **மார்டின் லூத்தர்** பிறந்த நாள் 10 **நவம்பர்** 1483, **பில்லி கிரஹாம்** 7 **நவம்பர்** 1918, **வில்லியம் கேரி** 17 **ஆகஸ்டு** 1761, **சாது சுந்தர்சிங்** 3 **செப்டம்பர்** 1889, **அன்னை தெரசா** 26 **ஆகஸ்டு** 1910 இவை போன்றவை **மகாத்மா காந்தி** பிறந்த நாள் 2 **அக்டோபர்** 1869 அகில உலக அமைதிப் போராட்ட நாள் (International Day of Non- Violence) என்று அனுசரிக்கப்படுகிறது. **Dr. S. ராதாகிருஷ்ணன்** பிறந்த நாள் 5 **செப்டம்பர்** 1888 ஆசிரியர் தினம், **ஜவஹர்லால் நேரு** பிறந்த நாள் 14 நவம்பர் 1889 சிறுவர் தினம், **சுபாஷ் சந்திரபோஸ்** பிறந்த நாள் 23 **ஜனவரி** 1897 தேசப்பற்று தினம் (Day of Patriotism) **Dr. அப்துல் கலாம்** பிறந்த நாள் 15 **அக்டோபர்** 1931 உலக மாணவர் தினம் இப்படிப் பல இவ்விதத் தேசிய விடுமுறை நாட்களில் நாம் ஜெபக்கூடுகைகள் அல்லது சிறப்பு கூட்டங்கள் நடத்தும்போது இந்த புகழேந்திகளைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூட சொல்லத் தவறுவது வருந்தத்திற்குறியது. மண்ணுலகிற்கு சற்றும் பயன்பட முடியாத அளவு விண்ணுலகச் சிந்தைக்குள் வந்துவிட்டோமோ?

## வம்ச வரலாறு

வம்ச வரலாற்றுக்கும் தங்களுக்கும் எவ்வித இணைப்பும் இல்லாமல்தான் பெரும்பாலான நமது பிள்ளைகளும் வாலிபர் நங்கையரும் வளருகின்றனர். **பிள்ளைகளது பிறந்த நாட்களின்போது** பெற்றோர் அவர்களுடன் உட்கார்ந்து **முன்னோர்களின் வாழ்க்கையிலிருந்து** நன்மை பயக்கக்கூடிய தகவல்களை எடுத்துச் சொல்லவேண்டும். **நாசரேத்திலுள்ள தச்சுபட்டறை** சீட்டில் தமது **30 பிறந்த நாட்களை** கொண்டாடிய இயேசுவுக்கு மரியன்னை **இதனை கட்டாயம் செய்திருப்பார்கள்.** (லூக் 3:23) அம்மையாருடைய பாடலில் பொங்கியெழுந்து வந்த வார்த்தைகளை கவனியுங்கள். தலைமுறை தலைமுறையாய் நாம் எடுத்துச் சொல்லவேண்டும். நமது மூதாதையர் ஆபிரகாமுக்கும் அவரது சந்ததிக்கும் (லூக்1:46,-55) புதிய ஏற்பாட்டின் முதல் பக்கத்திலும் லூக்கா மூன்றாம் அத்தியாயத்திலும் நாம் காணும் வம்ச வரலாறு மரியன்னைக்குத் தண்ணீர்ப் பாடமாக இருந்திருக்கும். (மத்தேயு தருவது **யோசேப்பின்** வம்ச அட்டவணை லூக்கா தருவது மரியாளின் வம்ச அட்டவணை. எனவேதான் இரண்டிற்குமிடையில் சில வேறுபாடுகள்) தனது செல்லப் பிள்ளை **சாமுவேலை** ஆண்டுதோறும் ஒரு வேளை அவனது பிறந்த நாளையடுத்து, **சந்திக்கச் சென்ற போதெல்லாம்**

தலைமுறை தலைமுறையாய் தேவன் காட்டிய இரக்கத்தைப் பற்றிய குறிப்புகளை **அன்னாள் சொல்லியிருப்பார்கள்.** அவர்களே **தைத்த புத்தாடையை** அவனுக்கு கொடுத்துவரும் போது இது நடந்திருக்கும் (1சாமு 2:1-10,19)

ஆம் ! பிரியமானவர்களே நமது வாழ்விலும், தாழ்விலும் நம்மை நினைத்தவராகிய ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபின் தேவனைப்பற்றிய அறிவை நமது பிள்ளைகளுக்குக் கடத்திவிடுவதே **தலைசிறந்த பிறந்த நாள் பரிசாகும்**. (சங். 136:23)

## போட்டோ ஆல்பங்களும் நாட் குறிப்பேடுகளும்

குடும்ப உறுப்பினர்கள் உட்கார்ந்து **போட்டோ ஆல்பங்களைப்** புரட்டிப் பார்ப்பது பெரும் பயனளிக்கும். மறக்க முடியாத நிகழ்வுகள் உங்களைப் புத்துணர்வடையச் செய்யும்., **டிஜிட்டல் செயலிகளில்** சேர்த்து வைப்பது வசதிதான். ஆனால் அது **ஆல்பங்களுக்கு ஒரு போதும் பதிலாக முடியாது.** உங்கள் கைபேசி அல்லது கணினியிலிருந்து கலர் படங்களைப் பிரிண்ட் எடுத்து வைத்துக்கொள்ளுங்கள். நாட்குறிப்பேடு (Diary) பழக்கத்தை நீங்கள் கைவிட்டிருந்தால் அது பேரிழப்புதான். நண்பர் மற்றும் உறவினர் வருகைகள், நிகழ்வுகள் தேவனது இடைபாடுகள் போன்றவையெல்லாம் உங்களை கடந்த கால நினைவுக்குள் எடுத்துச்சென்று உங்களைப் பரவசப்படுத்தும். தேவனுக்குத் துதி பாட வழி வகுக்கும் (சங்.10:12,2) ஆல்பங்களும் நாட்குறிப்புபேடுகளும் பிறந்த நாள் கொண்டாட்டங்களை மிகுந்த அர்த்தமுள்ளவையாக்கும். இவ்வாண்டில் வரும் பிறந்த நாளன்று நீங்கள் எடுக்கும் தீர்மானங்களை நாட்குறிப்பேட்டில் எழுதி வையுங்கள். அடுத்த ஆண்டு அதனைத் திருப்பிப் பார்ப்பது உங்களது அர்ப்பணிப்பைப் புதுப்பிக்க ஏதுவாயிருக்கும். **ஆப்பிரிக்காவிற்கு** முன்னோடி மிஷனரியாய்ச் சென்ற **டேவிட் விலிங்ஸ்டன்** (1813 - 1873 ) அவர்கள் தேவனுடன் செய்துக்கொண்ட உடன்படிக்கையை **பிறந்தநாள் தோறும் புதுப்பித்துக்கொள்வாராம்.** தமது பிறந்தநாளன்று, இயேசுவானவர் தமது தந்தையானவரிடம் செய்துக்கொண்ட உடன்பாட்டிலிருந்து அவர் பின்வாங்கவே இல்லை. (எபி. 10:5,6, சங்.40: 6-8) இங்கிருந்து நாம் புறப்படவேண்டிய நாளுக்கு ஒவ்வொரு பிறந்த நாளும் ஓராண்டை நமக்கு நம்மை சமீபமாய் கொண்டுவருவதால். நமது அர்ப்பணிப்பை ஆழப்படுத்தவும் வேலையை துரிதப்படுத்தவும் அது ஏற்ற சந்தர்ப்பமாயிருக்கும். (சங். 39:4,5, யோ. 9:4)

## நாட்டுப்பற்று

இந்தியாவில், அதிலும் குறிப்பாய் **இயேசுவானவர்** வளர்த்த ஊரின் பெயரையே (நாசரேத்) கொண்டுள்ள சிற்றூரில், பிறப்பதற்கு எனக்குக் கிடைத்த பாக்கியத்திற்காய் தேவனைத் துதிக்கிறேன். (லூ. 2:51,52) தனது **ரோம குடியுரிமை** குறித்து பவுலடியார் பெருமிதம் கொண்டதுபோல நானும் எனது **இந்தியக் குடியுரிமை** குறித்து மகிழுகிறேன். (அப். 22:27,28) உலகில் பல நாடுகளுக்கு எனது பைபிளுடன் தேவன் என்னை எடுத்துச்சென்றிருக்கிறார். அனைத்து நாடுகளின் மக்களையும் நான் நேசிக்கிறேன். ஆனால் எப்பொழுதும் தாயகம் திரும்புவோமென்ற ஏக்கம் யூதருக்கும் இலங்கையினருக்கும் இருப்பதை போல எனக்கும்

உண்டாகிவிடுகிறது. (சங்கீதம் 137: 1-4) ஐ ஒப்பிடுக நாம் பிறக்குமிடம் வளருமிடம் பணியிடம் போன்றவை குறித்து தேவன் ஏற்கனவே திட்டமிட்டிருப்பதை **நாம் சாதாரணமாக எண்ணிவிடக்கூடாது.** (சங். 87: 5,6) R. ஸ்டேன்லியாகிய நான் ஆன்மீகத்திலும் பருவ நிலையிலும் வறட்சி மிகுந்த நகராகிய **காரைக்குடியிலேயே** துவக்கக்கால (1963 - 1968) ஆவிக்குரிய வளர்ச்சியடைந்தேன். உருவாகவிருந்த தேசிய அளவிலான திருப்பணிக்காய் அந்த வனாந்திரத்தில் தான் தேவன் என்னை பயிற்றுவித்தார். குறைசொல்லிக் கொண்டேயிருப்பதற்குப் பதிலாக நமது நாட்டில் இல்லாத பிரச்சனைகளுக்காய் ஆண்டவரைத் துதித்தவண்ணமிருந்தேன். அக்கரைப் பச்சை நாடி இந்தியாவிலிருந்து சிறந்த ஊழியத் தலைவர்கள் பலர் மேலைநாடுகளுக்கு இடம் பெயர்ந்துவிட்டது இந்தியத் திருச்சபைக்கும் மிஷனரிப்பணிக்கும் பேரிழப்பு

## வரங்களும் தாலந்துகளும்

நமக்கு தேவன் அருளியுள்ள இயல்பான **தாலந்துகள்** மற்றும் **ஆன்மீக வரங்களுக்காய்** குறிப்பாய் **நமது பிறந்த நாட்களன்று** நாம் அவருக்கு நன்றி நவிலவேண்டும். பிறப்பிலேயே ஓவியர், ஆசிரியர், தலைவர், பேச்சாளர் என்றெல்லாம் உண்டல்லவா? (ஆதி25:27, யாத் 2:2, நியா 3:15, 1 நாளா 12:2) நம்மெல்லாருக்கும் நமது பிறவிக் குணங்கள் என்றுண்டு. அவற்றில் சில விரும்பத்தக்கவை, மற்றவை விரும்பத்தக்காதவை என்றிருக்கும். நமது தீய குணங்களைவிட நல்லவையே நமக்கு அதிகம் தெரியும். நமக்கிருக்கும் சிறந்த காரியங்கள் யாவும் தேவனது சுத்தக் கிருபையினாலேயே பெறப்பட்டவை என்றிருப்பதால் தம்பட்டம் அடித்துக்கொள்ள இடமேயில்லை. தேவன்விடும் சவால் இதோ. உன்னைச் சிறந்தவனாக்கிறவர் யார் ? உனக்கு உள்ளவற்றில் நீ பெற்றுக்கொள்ளாதது எது? நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன்போல் ஏன் பெருமை பாராட்டுகிறாய்? (கொரி. 4:7) தேவனிடமிருந்து பெற்ற **தாலந்துகளையும் வரங்களையும்** அவை சிறியவையோ பெரியவையோ உத்தமமாய்ப் பயன்படத்தியிருக்கிறோமா என்று கணக்கெடுத்துப் பார்க்க வேண்டும். நமது வாழ்வின் மாலை பொழுதிற்கு வந்திருந்தால், மோசே தனது 120ம் பிறந்த நாளன்று செய்ததுப்போல தொடரோட்டக் கட்டையை (Baton) அடுத்த **வரிசையினருக்கு** மனப்பூர்வமாய்க் கடத்திவிட ஆயத்தமாயிருக்கவேண்டும் (உபா., 31:1-6)

## பெயர் முக்கியமா ?

**பிறப்பில்** நமக்குக் கொடுக்கப்பட்ட **பெயர்களுக்காகவும்** ஆண்டவரைத் துதிக்கவேண்டும். **பெயரில் என்ன இருக்கிறது ?** என்று கேட்காதீர்கள், திருமறையில் பலருக்கு கொடுக்கப்பட்டவை காரணப் பெயர்களாம். பிறக்கும் முன்னரே சிலருக்கு பெயர்கள் சொல்லப்பட்டுவிட்டன. **இஸ்மவேல்** (ஆதி 16:11) ஈசாக்கு (17:19) யோசியா (1 இரா.13:2) **சாலமோன்** (1 நாளா 22:9) **கோரேசு** (ஏசா 44:28) யோவான் (லூக் 1:13) இயேசு மத் 1:21) தனி நபர்களின் பெயர்களைத் தேவன் மாற்றிவிட்டதும் உண்டு.

**ஆபிராம்** – ஆபிரகாம் (ஆதி 17:5) **சாரா** – சாராள் (வச. 15) **யாக்கோபு** – இஸ்ரவேல் (32:27,28) **சீமோன்** – பேதுரு (யோ. 1:2) அதிமுக்கியமானதொன்ற அறிவிக்க வேண்டுமானால் தேவன் இருமுறை பெயர் சொல்லி கூப்பிடுவார். **ஆபிரகாம்** (ஆதி 22:11) , **யாக்கோபு** (46:2) மோசே (யாத் 3:4) **சாமுவேல்** (1 சாமு 3:10) **மார்த்தாள்** (லூக் 10:41) **சீமோன்** (22:31) சவுல் (அப் 9:4) நாசரேத்திலுள்ள புனித லூக்கா மருத்துமனையின் முன்னோடிகளில் ஒருவராகிய Dr. Mrs. **வேத போதகம்** (1898 – 1949) அவர்கள் எனக்கு ஞானத்தாயாயிருந்து எனக்கு **ஸ்டான்லி** என்று பெயரிட்டார்கள். Dr.E. ஸ்டான்லி ஜோன்ஸ் (1884 – 1973) போல ஒரு பிரசங்கியாகவும், இங்கிலாந்தின் படையதிகாரிகளில் தலை சிறந்து விளங்கிய **Sir ஸ்டான்லி மாடே** (1864 – 1917) போல ஒரு படைவீரனாகவும் விளங்கவேண்டும் என்ற விருப்பத்துடன் அப்பெயரை எனக்கு தெரிந்தெடுத்தார்கள். எனது அப்பா போர்க்களம் சென்றவர். பிரசங்கபீடம் ஏறுபவர், Stanly என்ற பெயருக்கு Stony Meadow அதாவது பாறை நிலப் புல்தரை என்று பொருள். கர்த்தரில் பலம் கொண்டவனாகவும், மக்களிடம் பரிவு கொண்டவனாகவும் என்னை எப்பொழுதும் காத்துக்கொள்ளும் என்று ஆண்டவரிடம் வேண்டி வாழ்கிறேன். திருப்பணியைப் பொருத்தவரையில் **இறைமக்களைப்** பசும்புல் வெளிகளில் மேய்த்து, **கற்பாறையான** அடித்தளங்களில் அவர்களை **நிலைப்படுத்துகிறேன்,** எனக்கு இருவயது இளைய தம்பி மட்டுமே என்னுடன் பிறந்தவன். அவனுக்கு என் பெற்றோர் **கிறிஸ்டோபர்** (Christopher) எனப் பெயரிட்டனர். அதற்குப் பொருள் **கிறிஸ்துவைச் சுமப்பவர்**. (Christ - bearer) என்பதாகும். சுவிசேஷப் பணியில் (Evangelism) எனக்கும் என் மனைவிக்கும் இருக்கும் வேட்கையினால் எங்களது ஒரே பேரான குமாரத்திக்கு இவாஞ்சலின் (Evangeline) என்று பெயர் வைத்தோம். **ஜெபத்துடன்** பிள்ளைகளுக்குப் **பெயர்களைத்** தெரிந்தெடுக்கும்படி பெற்றோர்களைக் கேட்கிறேன்.

## தனி நபர் விருப்பம்

நமது வாழ்நாள் ஒவ்வொன்றும் முக்கியம்தான். ஆனாலும் நமது **பிறந்த நாளன்று சங்கீதம்** 118:24 கூடுதல் அர்த்தம் பெறுகிறது. இது கர்த்தர் தோற்றுவித்த நாள். இன்று **அகக்களிப்போம். அகமகிழ்வோம்.** தாவீதுடன் சேர்ந்து துதியுடன் தேவனிடம் இவ்விதம் அறிக்கையிடுவோம். ஆண்டினை உமது நலத்தால் முடிசூட்டுகின்றீர், உமது பாதைகள் நெய்யாய் வளம் கொழிக்கின்றன! (சங். 65:11) மட்டுமல்ல **கர்த்தாவே** நான் **கருவறையில் உருவாகியது முதல் உம்மால் ஆதரிக்கப்பட்டேன்.** என் தாயின் வயிற்றிலிருந்து என்னை **எடுத்தவர் நீரே,** உம்மையே நான் எப்பொழுதும் துதிப்பேன் (17:6) பிறந்த நாள் கொண்டாட்டம் என்பது சிறுபிள்ளைத்தனம் (Childishness) என்று வயதானவர்கள் நினைக்கலாம். இல்லை அது விரும்பத்தக்க சிறுபிள்ளை குணம் (Childlikeness) குழந்தைகள் பாலகரது கொண்டாட்டங்கள் பெரியவர்களும் மகிழும்படி துதி ஸ்தோத்திரச் சூழலை உண்டாக்கும் (மத். 21:15,16) இக்கட்டுரையை வாசித்த பின்னரும், பிறந்த நாட்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க தேவையில்லை என்று நீங்கள் கருதலாம். உங்கள் கருத்தை நான்

மதிக்கிறேன், ஏனென்றால் அப்போஸ்தலன் பவுல் அப்படித்தான் நமக்குப் போதித்திருக்கிறார். **ஒரு நாள் மற்றொரு நாளைவிடச் சிறந்தது** எனச் சிலர் கருதுகின்றனர். வேறு **சிலர் எல்லா நாளையும் ஒன்று போலவே கருதுகின்றனர்.** இத்தகையக் காரியங்களில் **ஒவ்வொருவரும் தனது மனத்தில்** செய்துக்கொண்ட **முடிவின்படி நடக்கட்டும்.** (ரோ. 14:5) தேவனைத் துதித்து உங்கள் பிறந்த நாளைக் கொண்டாட விரும்பினால். கீழ்கண்ட ஜெபத்தை ஏறெடுங்கள்.

## பிறந்த நாள் ஜெபம்

உலகங்கள் தோன்றும் முன்பும், எனது தாயின் வயிற்றில் நான் உருவாகும் முன்பும் என்னை அறிந்தவரே. எனது வாழ்வில் இன்னொரு ஆண்டைத் துவங்கும் இந்நன்னாளில் உமது பாதங்களில் பணிகின்றேன். சென்ற ஆண்டுகளிலெல்லாம் , அதிலும் குறிப்பாய்க் கடந்த ஆண்டில் நீர் எனக்குப் பாராட்டிய இரக்கத்திற்காகவும் காட்டிய அன்பிற்காகவும் நான் உம்மை எப்படி போற்றுவேன்? நான் இன்றுவரை அழிந்து போகாதிருப்பது உமது கிருபையினாலேயே, உமது இரக்கங்களுக்கு முடிவே இல்லை. காலை தோறும் அவை புதியவையாயிருக்கின்றன.

நீர் என்னிடம் எதிர்பார்த்த அளவு கீழ்படிதலும் தூய்மையும் எனது வாழ்வில் காணப்படவில்லை என்பதை வெட்கத்துடன் உம்மிடம் சொல்லுகிறேன். என்னை மன்னியும் ஆண்டவரே! எத்தனை தடவை உமது மென்மையான குரலுக்கு எனது காதுகளை அடைத்துக்கொண்டேன் ! உமது எச்சரிப்புகளைக் கவனியாது விட்டேன். போதுமான நேரம் உமது திருவசனத்தைத் தியானிப்பதில் செலவிடவில்லை. அனுதின ஜெபம் அவசர பூசையாகிவிட்டது. உமது திருப்பணியில் எனது ஈடுபாடு போதாது. நான் பேசிவிட்ட தேவையற்ற வார்த்தைகள்தான் எத்தனை, அப்பா, இப்படி என் பாவங்களை எண்ணி முடியாது. விண்தந்தாய், என்னை மன்னியும், கழுவும், என்மேல் கோபமாயிராதேயும்.

தேவா இன்னொரு முறை என்னை உம்மிடம் அர்ப்பணிக்கிறேன். உமக்கு கீழ்படிவதில் துரிதப்படவும், சிந்தையிலும் சொல்லிலும் தூய்மையைக் காத்துக்கொள்ளும், சக மனிதரோடுள்ள உறவிகளில் அன்பைக் காட்டவும், ஜெப தியானத்தில் கிரமமாயிருக்கவும் திருப்பணிக்கு அடுத்த காரியங்களில் தீவிரம் காட்டவும் இன்று தீர்மானிக்கிறேன். இன்றைக்கு நான் செய்யும் இந்த தீர்மானத்தை என்றைக்கும் காத்திட ஆவியை அருளும். உமக்கும் எனக்கும் இடையில் எதுவும் வராமல் காத்திடும், ஆண்டவரே !

எனது வாழ்கையில் அன்றும் இன்றும் ஆசீர்வாதமாயிருக்கும் எனது குடும்பத்தினர், ஆசிரியர், திருத்தொண்டர், மூத்தோர் மற்றும் நண்பர் யாவருக்காகவும் உம்மைத் துதிக்கிறேன். ஆண்டவரே! அவர்கள் எனக்குச் செய்த நன்மைகளுக்காய் அவர்களை ஆசீர்வதியும். என்னை பெற்றெடுத்தோருக்காய்த் துதிக்கிறேன். வேண்டுகிறேன். அவர்களை என்றும் கனம் பண்ண என்னை உணர்த்தும்.

நேசத் தந்தையே, எனது எதிர்காலத்தைப் பொறுப்பெடுத்துக்கொள்ளும், என்ன நோக்கத்திற்காக நீர் என்னை இவ்வுலகில் பிறக்கச் செய்தீரோ,அதை முழுமையாய் நிறைவேற்றும். நீர் செய்த சகல உபகாரங்களையும் நான் என்றும் மறவாதிருக்கச் செய்யும். இந்த நாளை எனக்கு மகிழ்ச்சியும் உமக்குப் புகழ்ச்சியும் ஆக்கும். இயேசு கிறிஸ்துவின் பெயரால் வேண்டுகிறேன், பிதாவே ! ஆமென்.

# அன்னிய பாஷை

நீங்கள் எல்லாரும் அந்நிய பாஷைகளை என்னைப்போல் பேசும்படி விரும்புகிறன். 1 கொரி 14:5

*இதற்கு அர்த்தம் :* **எல்லாரும் அன்னிய பாஷை பேச வேண்டும் என்பதல்ல**

1 கொரி 14:7,8 வனத்தில் நீங்கள் எல்லாரும் என்னைப்போல விவாகம் இல்லாதிருக்க விரும்புகிறேன் என்று பவுல் கூறினார்.

*இதனுடைய அர்த்தம் :* **சபையில் உள்ள பாஸ்டர் முதற்கொண்டு எல்லா விசுவாசிகளும் திருமணம் செய்யாமல் இருக்க வேண்டும் என்பதல்ல.**

பலர் செய்யும் தவறு என்னவென்றால்
ஒரு விஷயத்தை மற்ற வசனத்தோடு ஒப்பிட்டு பார்த்து
சரியான அர்த்தத்தை கண்டுகொள்வதில்லை
அதனாலேயே உபதேசம் மாறுகிறது.

*– சகரியா பூணன்*

NOVEMBER 2022

Printed Book (Periodical)

RNI Reg. No. TNBIL/2016/70171

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005,**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.